**செய்தி வெளியீடு எண்:32** **நாள்:16.01.2021**

**<u>இன்று (16.1.2021), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் மதுரை மாவட்டம், அலங்காநல்லூரில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு காளை அடக்கும் போட்டியை துவக்கி வைத்து ஆற்றிய உரை:</u>**

உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டுக்கு இடையூறு வந்தபோது, அந்த ஜல்லிக்கட்டு நடைபெறுவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு தூணாக விளங்கி, மிக எழுச்சியோடும் சிறப்போடும் நடைபெறுவதற்கு காரணகர்த்தாகவாக இருந்து, ஜல்லிக்கட்டு நாயகன் என அனைவராலும் அன்போடு அழைக்கப்படக்கூடிய, இந்த நிகழ்ச்சியை தொடங்கி வைத்த,

மரியாதைக்குரிய அண்ணன் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அண்ணன்

திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே!

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் சகோதரர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களே!

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அண்ணன் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்களே!

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் சகோதரர் திரு.சி.விஜய பாஸ்கர் அவர்களே!

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் சகோதரர் திரு.கடம்பூர் ராஜு அவர்களே!

இந்தத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய சகோதரர் திரு.ரவீந்திரநாத் அவர்களே!

மற்றும் இந்தத் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் அருமை சகோதரர் மாணிக்கம் அவர்களே!

மரியாதைக்குரிய சட்டப்பேரவை உறுப்பினர் திரு.பெரியபுள்ளான் அவர்களே!

மரியாதைக்குரிய சட்டப்பேரவை உறுப்பினர் திரு.நீதிபதி அவர்களே!

மரியாதைக்குரிய மாவட்டச் செயலாளர், சட்டப்பேரவை உறுப்பினர் அண்ணன் திரு.ராஜன் செல்லப்பா அவர்களே!

மரியாதைக்குரிய சட்டப்பேரவை உறுப்பினர் டாக்டர். பரமசிவம் அவர்களே!

மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு.சரவணன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியை தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

கழகத்தின் முன்னோடி நிர்வாகிகளே!

உள்ளாட்சி அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகளே!

கூட்டுறவு சங்க நிர்வாகிகளே!

பெருந்திரளாக கலந்து கொண்டு ஜல்லிக்கட்டைக் காண வந்திருக்கின்ற பெரியோர்களே! தாய்மார்களே!

வீர விளையாட்டில் கலந்து கொண்டு காளைகளை அடக்கவிருக்கின்ற இளைஞர் சிங்கங்களே!

பத்திரிகையாளர்களே! ஊடக நண்பர்களே!

அரசு அலுவலர்களே!

அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகப் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டான அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நடைபெறும் இந்த மண் அனைவராலும் பாராட்டப்படக்கூடிய மண்ணாகும். இந்த மண்ணிலே பிறந்த அத்தனை இளஞ்சிங்கங்களும், சீறி வருகின்ற காளைகளை பிடித்து அடக்குவதற்கான பக்குவத்தோடு இங்கே நின்று கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு சீறி வருகின்ற காளைகளை அடக்குகின்ற இளைஞர்கள் பட்டாளம் நிறைந்த இந்த ஜல்லிக்கட்டு விழா உலகப் புகழ்பெற்ற விழா என்று சொன்னால் அது மிகையாகாது. உலக மக்கள் அனைவரும் காணக்கூடிய இந்த வீர விளையாட்டை, நம்முடைய கலாச்சார பண்பாட்டை, பாரம்பரியம் மிக்க பண்பாட்டைக் காக்கக் கூடிய ஜல்லிக்கட்டு விளையாட்டை, மாண்புமிகு அம்மாவின் அரசுதான் நிலைநிறுத்துகிறது என்பதைப்

பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். இந்த வீர விளையாட்டில் கலந்து கொண்டிருக்கிற அனைத்து இளைஞர் பெருமக்களுக்கும், அதோடு, வீரமிக்க காளைகளை வளர்த்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், வருகை தந்திருக்கின்ற அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**